**சுருக்கம்**

திடக்கழிவு மேலாண்மை – அரசாணை (நிலை) எண். 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி1) துறை, நாள் 25.9.2014 பத்தி எண். 6 மற்றும் 7 க்கு திருத்தங்கள் வெளியிடுதல் – ஊரகப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட முறைமைகள் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் – வெளியிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி1) துறை**

**அரசாணை (நிலை) எண்.47** **நாள்: 26.03.2015.**

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 116, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி1) துறை, நாள் 4.9.2013.
2. அரசாணை (நிலை) எண். 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி1) துறை, நாள் 25.9.2014.
3. கடிதம் (பத்தாண்டு) எண். 50, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி1) துறை, நாள் 27.1.2015.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.15803/2014/NBA –3, நாள் 5.3.2015

*****

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, அரசாணை (நிலை) எண். 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி1) துறை, நாள் 25.9.2014ல் ரூ.200/- கோடி நிதி அனுமதி வழங்கியும், அந்த நிதியில், 12,524 கிராம ஊராட்சிகளில் குப்பை கூளங்களை அகற்றுவதற்கு 17,638 மூன்று சக்கர மிதிவண்டிகள் வாங்குவதற்கென ரூ.44.10 கோடி ஒதுக்கீடு செய்தும், 2014–15ம் ஆண்டில் திட்ட வடிவிலான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ.155.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணையிட்டுள்ளது.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், படிப்படியாக அனைத்து கிராமங்களிலும் நிலைத்து நீடித்து இருக்கக்கூடிய திடக்கழிவு மேலாண்மை முறையை விரைந்து செயல்படுத்துவது அவசியமாகிறது என தெரிவித்துள்ளார். திட்டவடிவிலான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது கூடுதலான காலஅளவு தேவைப்படும் செயல்முறை ஆகும். தொழில்நுட்ப வல்லுநர் மூலம் விவரமான திட்ட அறிக்கைகள் (DPR) தயாரிக்கப்பட்டு, அவற்றில் நிலைத்து இருக்கக் கூடிய தன்மையை

ஆய்வுசெய்து, மாநில அளவில் அனுமதியும் திட்டத்துக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் இந்த நடைமுறையின்படி உருவாக்கப்படவேண்டும். இதனை கருத்தில் கொண்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள், அதிக என்னிக்கையிலான கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இத்திட்ட செயல்முறைகள் விரைவுபடுத்த வேண்டி, முதற்கட்டமாக 2,000 கிராம ஊராட்சிகளில் மறுசுழற்சி மற்றும் குப்பை கூளங்கள் வெளியேற்றும் வசதிகளை அமைத்து திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படலாம் என ஆலோசனை வழங்கியுள்ளார். அரசு ஆணை (நிலை) எண். 116, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி-1) துறை, நாள்: 4.9.2013ல் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி திட்ட வடிவில் மாவட்டங்களால் முன்மொழியப்பட்டுள்ள திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை திட்டத்துடன் ஒருங்கிணைத்தும் அதற்கு கூடுதலாகவும் இந்த திட்டத்தையும் நிறைவேற்றலாம். திடக்கழிவு மேலாண்மை திட்ட நடவடிக்கை என்பது, கண்டறியப்பட்ட கிராம ஊராட்சிகளில் கழிவு பொருட்களை சேகரித்தல், அகற்றுதல் மற்றும் பாதுகாப்பான முறையில் வெளியேற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். மேலும் இதில் அனைத்து கிராம சமுதாயத்தினரையும் பங்கு பெற செய்வதாகும். அனைத்து கிராம ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மையை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டாலும் கீழ்கண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தன்மை உள்ள 2,000 கிராம ஊராட்சிகளில் பரீட்சார்த்த முறையில் முதற்கட்டமாக செயல்படுத்தப்படும்.

i. 10,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகள்;

ii. பெரிய நகர்ப்புறத்தை (மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகள்) ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள்;

iii. முக்கியத்துவம் வாய்ந்த, சுற்றுலா மற்றும் புனித தலங்கள் உள்ள கிராம ஊராட்சிகள்;

iv. மக்கள் அதிகளவில் வந்து செல்லக்கூடிய, பெரிய பேருந்து நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்கள் உள்ள கிராம ஊராட்சிகள்;

v. பெரிய தொழிற்சாலைகள்/வணிக அமைப்புகள் / கல்வி நிறுவனங்கள்அடங்கிய கிராம ஊராட்சிகள்;

vi. நான்கு வழிச்சாலைகள் பழைய மகாபலிபுரம் சாலை, கிழக்கு கடற்கரைச்சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி அமைந்துள்ள கிராம ஊராட்சிகள்;

vii. பெரிய அளவிலான சந்தைகள் கொண்ட கிராம ஊராட்சிகள்; அல்லது

viii. ஊராட்சி ஒன்றிய மற்றும் வட்டம் ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் கிராம ஊராட்சிகள்.

3. திடக் கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த, மேற்கண்ட தன்மை கொண்ட கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட வாரியான பட்டியல், இணைப்பு – IIல் கொடுக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் திடக் கழிவு மேலாண்மை திட்டம் ஊரகப்பகுதிகளில் நிறைவேற்றுவதற்காக விரிவான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை அனுப்பியுள்ளார். இத்திட்டத்தினை செயல்படுத்த வெளியிடப்படவுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி இத்திட்டத்திற்கு கீழ்கண்ட இனங்களுக்கு தேவைப்படும் நிதி பின்வருமாறு:

**i) திடக் கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மூன்று சக்கர மிதிவண்டிகள் வாங்குதல்:** ஒவ்வொரு 300 குடும்பங்களுக்கு ஒரு மூன்று சக்கர மிதிவண்டி வீதம் தலா ரூ.20,000 மதிப்பீட்டில் வழங்கப்படும். ஏற்கனவே அரசாணை (நிலை) எண். 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி-1) துறை நாள் 25.9.2014ல் அனுமதி வழங்கப்பட்ட மூன்று சக்கர மிதிவண்டிகளை கருத்தில் கொண்டு மொத்தத் தேவை கணக்கிடப்பட வேண்டும்.

**ii) நறுக்கும் இயந்திரம் மற்றும் தூய்மைபடுத்தும் இயந்திரங்களை வாங்குதல்:** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 3 லட்சம் மதிப்பீட்டில் ஒரு நறுக்கும் இயந்திரமும், ஒரு தூய்மை படுத்தும் இயந்திரமும் வழங்கப்படும்.

iii) **திடக் கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து தூய்மைபடுத்துவதற்குத் தேவையான உபகரணங்கள்:** திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளுக்கான உபகரணங்கள் வாங்குவதற்கென கண்டறியப்பட்ட ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஒரு முறை மட்டும் ரூ. 25,000/– நிதி வழங்கப்படும்.

**iv) சேகரித்தல் மற்றும் பிரித்தல் பணிக்காக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணியாளர்களை ஈடுபடுத்துதல்:** ஒவ்வொரு 150 குடும்பங்களுக்கும் ஒரு பணியாளர் அனுமதிக்கப்படுவர். முதல் நூறு நாட்களுக்கான ஊதியம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திலிருந்து வழங்கப்படும். திட்டம் செயல்படுத்தப்படும் முதல் வருடத்திற்கு மட்டும் மீதமுள்ள நாட்கள் பணி புரிவதற்கான ஊதியம் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியில் இருந்து வழங்கப்படும்.

**v) திடக் கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து பணியாளர்களுக்கென மேல்சட்டை** (Jacket)**, கையுறைகள், தொப்பி ஆகியவை வழங்குதல்:** ஒவ்வொரு பணியாளருக்கும் ஒரு மேல்சட்டை, ஒரு தொப்பி, ஒரு ஜோடி கையுறைகள் ஆகியவை வழங்கப்படும்.

**vi) எதிர்பாராத செலவினங்கள்:** ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் எதிர்பாராத செலவுகளுக்கென ரூ.10,000 நிதி ஒரு முறை மட்டும் வழங்கப்படும்.

**vii) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் நிதியில் திடக்கழிவு கொட்டி வைக்க தேவையான குழிகள் அமைத்தல்:** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் இந்தப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் அரசாணை (நிலை) எண் 116, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (ம.அ.தி) நாள் 4.9.2013 ன்படி திட்ட வடிவிலான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில், உத்தேச திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி மனிதசக்தி தேவைகளுக்கான தொகை மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படலாம் எனவும் மேற்கண்ட கிராம ஊராட்சிகளில் திட்ட வடிவிலான திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த வெளியிடப்பட்ட வழிமுறைகளில், செயலாக்கம் மற்றும் பராமரிப்புக்கென(O&M) தனியாக நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை என்பதால், இவ்வூராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களை ஈடுபடுத்த அனுமதி அளிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

**4.** மேலே குறிப்பிட்டபடி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் சராசரியாக தலா ரூ.5.50 இலட்சம் வீதம் 2,000 கிராம ஊராட்சிகளுக்கு மொத்தம் ரூ. 110 கோடி தேவைப்படலாம் என கீழ்கண்டவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## 2,000 கிராம ஊராட்சிகளுக்கு இனம் வாரியாக தேவையான நிதி

| வரிசை எண் | விவரங்கள் | தொகை (ரூ. கோடிகளில்) |
|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மைத் திட்ட பணியாளர்களின் ஊதியம் (முதல் வருடத்தில் 200 நாட்கள் செயல்படுத்துவதற்கு) | 80.00 |
| 2. | மூன்று சக்கர மிதிவண்டி (300 குடும்பங்களுக்கு ஒரு மூன்று சக்கர மிதிவண்டி வீதம்) | 17.00 |
| 3. | மேல்சட்டை மற்றும் இதர பொருட்கள் | 5.00 |
| 4. | திடக்கழிவு மேலாண்மைக்கென தேவையான உபகரணங்கள் | 5.00 |
| 5. | நறுக்கும் இயந்திரம் மற்றும் தூய்மை படுத்தும் இயந்திரங்கள் (மாவட்டத்திற்கு ஒன்று வீதம்) | 5.00 |
| 6. | இதர எதிர்பாராத செலவினங்களுக்காக | 2.00 |
| **மொத்தம்** | | **110.00** |

**5.** அரசாணை (நிலை) எண் **116** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி–1) துறை, நாள் **4.9.2013**ன் படி வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி திட்ட வடிவிலான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை திட்ட முன்மொழிவுகள் ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்டுவருகிறது. திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவதில் தொழில்நுட்ப நிபுணத்துவம் தேவைப்படுவதாலும், தனித்தனியாக ஒவ்வொன்றையும் கண்காணிக்க வேண்டியுள்ளதாலும், பரீட்சார்த்த முறையில் செயல்படுத்த உள்ள இத்திட்டம் பெறும் வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு, மேலும் இதுபோன்ற திட்டங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

**6.** எனவே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள் ஊரகப் பகுதிகளில் கண்டறியப்பட்ட **2,000** கிராம ஊராட்சிகளில் திடக் கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த வேண்டி, அரசாணை (நிலை) எண். **131** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி–1) துறை, நாள் **25.9.2014–ல்** பத்திகள் **6** மற்றும் **7** க்கு திருத்தங்கள் வெளியிடக் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் **2014–15**ம் ஆண்டு திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை திட்டம், திட்டவடிவில் செயல்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.**155.90** கோடியில், உத்தேசமாக ரூ. **110** கோடியை இதற்கு பயன்படுத்திக் கொள்ளவும், வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் அளிக்கும்படியும் கோரியுள்ளார்.

**7.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் முன்மொழிவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, பகுதி (Stream) II-ல் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள திட்ட வடிவிலான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவதற்கு பதிலாக **2,000** கிராம ஊராட்சிகளில் திடக் கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த வேண்டி, அரசாணை (நிலை) எண். **131**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி–1) துறை, நாள் **25.9.2014**ல் பத்திகள் **6** மற்றும் **7**க்கு திருத்தங்கள் செய்தும், **2014–15** ம் ஆண்டு திட்ட வடிவில் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. **155.90** கோடியில் உத்தேசமாக ரூ. **110** கோடியை பயன்படுத்திக் கொள்ளவும் ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், ஊரகப்பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை முறைமையை,

திட்டமிடவும் செயல்படுத்தவும் இந்த அரசாணை இணைப்பு 1ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,
சென்னை – 15

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15 வழியாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15 வழியாக)

செயலாளர்,
ஊரக வளர்ச்சி அமைச்சகம், இந்திய அரசு, கிரிஷிபவன், புதுதில்லி– 110 001

செயலாளர்,
குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சகம், இந்திய அரசு, பர்யாவரன்பவன், புதுதில்லி
மாநில கணக்காயர், சென்னை–18

நகல்
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி , சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைகள்), சென்னை–9
செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை , சென்னை – 9
நிதி (ஊவ )துறை, சென்னை–9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (அ.ந.2) துறை, சென்னை–9
மாநில தகவல் மையம், சென்னை– 9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**அரசாணை (நிலை) எண். 47, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ. தி –1) துறை, நாள் 26.03.2015**

**இணைப்பு–I**

**ஊரகப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட முறைமைகள் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்.**

**1. முன்னுரை:**

1.1 நீடித்து மற்றும் நிலைத்து இருக்கக்கூடிய திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை படிப்படியாக அனைத்து கிராமங்களிலும் செயல்படுத்துவது அவசியமாகிறது. முதற்கட்டமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட 2,000 கிராம ஊராட்சிகளில் மறுசுழற்சி மற்றும் குப்பை கூளங்கள் வெளியேற்றும் வசதிகளுடன் கூடிய முறையான திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

1.2 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகள் என்பவை, கிராம சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரின் பங்கேற்புடன் கழிவுப் பொருட்களை சேகரித்தல், அகற்றுதல் மற்றும் பாதுகாப்பான முறையில் வெளியேற்றுதல் ஆகியவை உள்ளடக்கியதாக இருக்கும்.

**2. உத்திகள்:**

2.1 முன்னுரிமை அடிப்படையில் அதிகபட்சமாக கழிவுகள் உற்பத்தியாகும், 10,000–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சிகள், நகர்ப்புறத்தை ஒட்டிய கிராம ஊராட்சிகள், சுற்றுலாத் தலங்கள்/புனிதத் தலங்கள் மற்றும் தொழிற்சாலைகள் கொண்ட கிராம ஊராட்சிகள், தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்து இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதர கிராம ஊராட்சிகளில் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

2.2 உள்ளூர் மக்கள் பங்கேற்புடன் குக்கிராமங்கள்/தொகுப்பு கிராமங்கள் அடிப்படையிலான செயல் திட்டம் வகுத்தல்.

2.3 உள்ளூர் மக்களின் ஆதரவுடன் திடக்கழிவு மேலாண்மையை செயல்படுத்த கிராம சபையில் தீர்மானம் இயற்றுதல்.

**3. கிராமங்களை கண்டறிதல்:**

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டாலும், கீழ்கண்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தன்மை உள்ள 2,000 கிராம ஊராட்சிகளில் பரீட்சார்த்த அடிப்டையில் முதற்கட்டமாக செயல்படுத்தப்படும்.

1. 10,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகள்;
2. பெரிய நகர்ப்புறத்தை (மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகள்) ஒட்டிய கிராம ஊராட்சிகள்;
3. முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மற்றும் புனிதத் தலங்கள் உள்ள கிராம ஊராட்சிகள்;
4. மக்கள் அதிகளவில் வந்து செல்லக்கூடிய, பெரிய பேருந்து நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்கள் உள்ள கிராம ஊராட்சிகள்;
5. பெரிய தொழிற்சாலைகள்/வணிக அமைப்புகள் / கல்வி நிறுவனங்கள்அடங்கிய கிராம ஊராட்சிகள்;
6. நான்கு வழிச்சாலைகள் / பழைய மகாபலிபுரம் சாலை, கிழக்கு கடற்கரைச்சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி அமைந்துள்ள கிராம ஊராட்சிகள்;
7. பெரிய அளவிலான சந்தைகள் கொண்ட கிராம ஊராட்சிகள்; அல்லது
8. ஊராட்சி ஒன்றிய மற்றும் வட்டம் ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் கிராம ஊராட்சிகள்;

3.1 திடக்கழிவு மேலாண்மையை செயல்படுத்த, மேற்கண்ட தன்மை கொண்ட கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு மாவட்ட வாரியான பட்டியல், **இணைப்பு – IIல்** கொடுக்கப்பட்டுள்ளது.

## 4. குக்கிராமம்/தொகுப்பு குக்கிராமங்களின் அளவில் திட்டமிடுதல்

4.1 ஒரே ஒரு குக்கிராமத்தைக் கொண்ட **கிராம ஊராட்சிகளில்** திட்டமிடுவதற்காக அந்த **கிராம ஊராட்சியே** ஒரு தனி அலகாக கருதப்படும்.

4.2 ஒரு குக்கிராமத்திற்கு மேல் உள்ள ஊராட்சிகளில், அந்த ஊராட்சியை ஒரே அலகாக கருதாமல், **ஒவ்வொரு குக்கிராமத்திற்கும்** தனித்தனியாக **திட்டமிடப்பட** வேண்டும்.

4.3 சில இடங்களில், குக்கிராமங்கள் அளவில் கையாளுவதற்கு மிகவும் சிறிய பகுதியாக இருக்கலாம். இந்நேர்வில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட **குக்கிராமங்களின் தொகுப்பு** முறையை பின்பற்றலாம். இருப்பினும், தேவைப்படும் இடங்களில், **கழிவு பொருட்கள் உற்பத்தியின் அளவு, குக்கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை** ஆகியவற்றின் அடிப்படையில், தேவையான சில மாற்றங்களை செய்து கொள்ளலாம்.

4.4 ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் செயல்படும் சமூக அடிப்படையிலான அமைப்புகளில், முக்கியமாக, கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் ஈடுபடுத்தப்பட்டு (கிராம வறுமை ஒழிப்பு சங்கம் செயல்படாது இருப்பின், கிராம அளவிலான கூட்டமைப்பை) கீழ்கண்ட செயல்பாடுகளில் அவை கிராம ஊராட்சிகளுக்கு உதவி புரிய வேண்டும்.

(அ) வேலையில் ஈடுபடும் பணியாளர்களை ஊக்கப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.

(ஆ) கிராம ஊராட்சியிருந்து பெறப்படும் நிதியிலிருந்து பணியாளர்கள் செய்த பணிக்கு ஊதியம் வழங்குதல்.

**5. திடக்கழிவுகளைக் கொட்டி வைப்பதற்கான குழிகள் அமைத்தல் மற்றும் குப்பைகளை பிரிப்பதற்கும், சேகரித்து வைப்பதற்கான இடங்களை கண்டறிதல்.**

5.1 நிலத்தடி நீரையோ, நிலப்பரப்புக்கு மேல் உள்ள நீரையோ, சுற்றுப்புறக் காற்றின் தரத்தையோ மாசுபடுத்தாத வண்ணம் திடக்கழிவுகள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

5.2 எனவே திடக்கழிவுகள் அப்புறப்படுத்தப்படுவதற்கு முன், கரிமக்கழிவு (மக்கும் குப்பை), கனிமக்கழிவு, மறுசுழற்சி செய்யக்கூடியவை மற்றும் அபாயகரமான கழிவுகள் என பிரிக்கப்பட வேண்டும்.

5.3 திடக்கழிவினை அது **உருவாகும் இடத்திலிருந்தே பிரித்தெடுத்து** அகற்றும் முறை என்பது சிறந்த ஒன்றாக அமையும். இச்செயல் நேரம், இடம் மற்றும் செலவினை சிக்கனப்படுத்தும். எனினும், திடக்கழிவினை இறுதியாக அப்புறப்படுத்தும் முன்னர் அவை தனித்தனியாக பிரித்தெடுப்பதை உறுதி செய்ய வேண்டும். இதற்கு, இறுதியாக அப்புறப்படுத்தும் முன்னர் **சேகரிக்கப்பட்ட குப்பைகளை இருப்பு வைப்பதற்கும், அவற்றை பிரித்து எடுப்பதற்கும் போதுமான இடவசதி** வேண்டும். எனவே, ஒவ்வொரு குக்கிராமத்திலும் குப்பைகளை **சேகரித்து இருப்பு வைத்து பிரித்தெடுப்பதற்கான இடங்கள் அடையாளம் காணப்பட** வேண்டும். அக்குக்கிராமங்களில் பயன்படுத்தப்படாத அரசு கட்டடங்கள் ஏதும் இருப்பின் அவற்றை குப்பைகளை சேகரித்து இருப்பு வைத்து பிரித்தெடுப்பதற்காக பயன்படுத்தலாம்.

5.4 இதைப்போன்றே, பிரிக்கப்பட்ட கழிவுகளை கொட்டுவதற்கான இடம் கண்டறியப்பட வேண்டும். பொதுவாக இதற்கு மூன்று குழிகள் தேவைப்படும். மக்கும் கழிவு மூலம் **உரம் தயாரிப்பதற்கு இரண்டு குழிகள்** மற்றும் மீதமுள்ள திடக் கழிவுகளை குவித்து வைக்கவும் **(Sanitary landfill)** ஒரு குழி தேவைப்படும். இம்மூன்று குழிகளும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட வேண்டும்.

5.5 கூடுமான வரையில், ஒரு குக்கிராமத்தில் உருவான கழிவு **அதே குக்கிராமத்தில்** அப்புறப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஒரு குக்கிராமத்தில் **இடப்பற்றாக்குறையின்** காரணமாக இயலாது எனில் அல்லது அருகிலுள்ள குக்கிராமத்தில் **போதுமான இட வசதியுள்ள** இடத்தில் குப்பைகளை அகற்றுவது பயனளிக்கும் எனில், கழிவுகளை அப்புறப்படுத்துவதை குக்கிராம தொகுப்பு (Cluster) அளவில் நிறைவேற்ற திட்டம் தயார் செய்யலாம்.

**6. திடக்கழிவுகளை குவித்து அப்புறப்படுத்துவதற்கான குழிகள் மற்றும் துப்புரவு சார்ந்த குழிகளை (Sanitary Landfill) அமைத்தல்**

6.1 மேலே விவரித்தவாறு. கழிவுகள் அப்புறப்படுத்துவதற்கு முன்பாக பகுக்கப்படுவது (Segregation) அதிமுக்கியமாகும். குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக பிரிப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

1) **மக்கும் குப்பைகள்:**
உயிரியல் முறையில் நுண்ணுயிர்கள் மூலம் மக்கிப்போகும் தன்மையுள்ள கழிவுகள், மக்கும் குப்பைகள் ஆகும். உதாரணமாக, **சமையலறைக்கழிவு, விலங்குகளின் சாணம், வேளாண் கழிவுகள்** ஆகியவையாகும். **இவ்வகையான கழிவுகள் உரக்குழிகளில் கொட்டப்பட வேண்டும்.**

2) **மக்காத குப்பைகள்:**

உயிரியல் முறையில் மக்காத தன்மை கொண்ட கழிவுகள் மக்காத கழிவுகள் ஆகும். அவற்றில் மறு சுழற்சி செய்யக் கூடிய கழிவுகளான பிளாஸ்டிக் தாள்கள் மற்றும் பழைய துணி ஆகியவற்றின் பொருளாதார மதிப்பினை மீளப்பெறலாம். **இத்தகைய கழிவுகளை விற்பனை செய்யலாம்.** பொருளாதார மதிப்பற்ற தெர்மாகோல், கார்பன் தாள், பதப்படுத்தும் அட்டைகள் மறு சுழற்சி செய்ய இயலாத கழிவுகள் ஆகும். இவை **துப்புரவு சார்ந்த கழிவுகள் பிரிப்பதற்காக அமைக்கப்பட்ட குழியில்** கொட்டப்பட வேண்டும்.

6.2 **உரக் குழிகளை வெட்டுதல்:** வெளியேற்றப்படும் குப்பையின் அளவையும், இட வசதியையும் பொறுத்து, அமைக்கப்பட வேண்டிய குழிகளின் அளவு வேறுபடும். உரக்குழிகளில் வெவ்வேறு அளவுகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களால் பின்னர் வெளியிடப்படும். இருப்பினும், மதிப்பீடுகளை தயாரிக்கும்போது அந்தந்த பகுதிகளின் தேவைகளுக்கு ஏற்றாற் போல் அளவுகள் மாற்றிக் கொள்ள தொழில்நுட்ப அலுவலர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

6.3 மக்கிய உரம் தயார் செய்வதில் பாரம்பரிய முறைப்படி, உரக்குழியில் கொட்டப்படும் மக்கும் குப்பை மீது அங்கேயே எடுக்கப்பட்ட மண்/மணல் மற்றும் மாட்டு சாணத்தை போட வேண்டும். இவ்வாறு உரக்குழி முழுமையாக நிரம்பும் வரை இந்த முறையை பின்பற்ற வேண்டும். எங்கெல்லாம் இயலுகிறதோ, அங்கெல்லாம் மண்புழு மூலம் உரம் தயாரிக்கும் முறை செயல்படுத்தப்படலாம்.

6.4 உரக்குழியில் கொட்டப்படும் கழிவின் அளவைப் பொறுத்து, ஒரு உரக்குழியை 3 முதல் 6 மாதங்கள் வரை பயன்படுத்தலாம். ஒரு குக்கிராமம் / குக்கிராமங்களின் தொகுப்பிற்கு குறைந்தபட்சமாக 2 உரக்குழிகள் தோண்டப்பட வேண்டும். உரக்குழியின் அளவு 3 மாதங்கள் கழிவுகள் கொட்டும் அளவிற்கு போதுமானதாக இருக்க வேண்டும். முதல் உரக்குழி நிரம்பியதும் உரமாகும் பொருட்டு 3 மாதங்கள் அவகாசம் அளிக்கப்பட வேண்டும். அந்த 3 மாதங்களுக்கு மக்கும் குப்பை இரண்டாவது குழியில் கொட்டப்பட வேண்டும். இரண்டாம் குழி நிரம்புவதற்குள் முதல் குழியின் கழிவு உரமாக மாறியிருக்கும். இத்தகைய சுழற்சி முறையை கடைபிடிக்கப்பட வேண்டும்.

6.5 **மறுசுழற்சி செய்ய இயலாத குப்பைகளை அப்புறப்படுத்த துப்புரவு சார்ந்த குழிகள் வெட்டுதல்:** மறு சுழற்சி செய்ய இயலாத மக்காத திடக்கழிவுகளான கண்ணாடி, உடைந்த ஓடுகள், கட்டிட கழிவுகள் போன்றவற்றை மேற்கொண்டு பயன்படுத்த இயலாது என்பதால் அவற்றை சேகரித்து கொண்டு சென்று துப்புரவு சார்ந்த குழிகளில் நிரப்பலாம். இதற்காக பயிர் செய்ய இயலாத நிலங்கள் மற்றும் நிலத்தடி நீர் மாசு ஏற்படாத நிலங்கள் ஆகியவை கண்டறியப்பட்டு பயன்படுத்த வேண்டும்.

## 7. மனிதசக்தி தேவைகள் – தூய்மை காவலர்.

7.1 **திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களை ஈடுபடுத்துதல்:** ஒவ்வொரு குக்கிராமத்திலும் தேவைக்கேற்ப மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களை தேர்வு செய்து ஈடுபடுத்தலாம். அது எவ்வகையிலும் ஒவ்வொரு 150 குடும்பத்திற்கு

ஒரு பணியாளர் என்ற விகிதத்திற்கு மேல் இருக்கக்கூடாது.

7.2 இந்த பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளான வீட்டுக்கு வீடு குப்பைகளை சேகரித்தல், பிரித்தெடுத்தல், குப்பைக்குழிக்கு கொண்டு சென்று கொட்டுதல் போன்ற அனைத்து பணிகளிலும் முழுமையாக ஈடுபடுத்தப்படவேண்டும்.

7.3 **'தூய்மைக் காவலர்களுக்கு'** ஒவ்வொரு வருடமும், ஒரு மேல்சட்டை (Jacket), ஒரு தொப்பி, 1 ஜோடி கையுறைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி வழங்கப்படும்.

7.4 இப்பணியாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகள் குறித்து எளிமையான பயிற்சிகள் அளிக்கலாம்.

7.5 தேவைக்கேற்றாற் போல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் அதே ஊராட்சிக்குட்பட்ட மற்ற குக்கிராமங்கள்/ குக்கிராமங்களின் தொகுப்பில் சுழற்சி முறையில் பணியாற்றிக் கொள்ளலாம்.

7.6 ஒவ்வொரு பணியாளருக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் ஊதிய விகிதம் வழங்கப்பட வேண்டும்.

**8. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு – தூய்மைக் காவலர்களை கண்காணிக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுதல்:-**

8.1 கிராம ஊராட்சி, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிளான கூட்டமைப்பு உதவியுடன் இப்பணியாளர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணியாளர்கள் குழுவை உருவாக்க வேண்டும்.

8.2 திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கான முதல் 100 நாள் ஊதியம் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டும். 100 நாட்களுக்கு மேல், ஊதியம் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து வழங்கப்படவேண்டும்.

8.3 பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கி கண்காணிக்க, தேவையான நிதியினை கிராம ஊராட்சியானது, திடக்கழிவு மேலாண்மை திட்டக் கணக்கிலிருந்து கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு விடுவிக்க வேண்டும். (கிராம ஊராட்சித் தலைவரே கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் கௌரவ தலைவர் ஆவார்). இந்த காலத்திற்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட ஊதிய விகிதத்திலேயே ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

8.4 கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஈடுபடுத்துவதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஈடுபாட்டினை உறுதிப்படுத்தலாம். மேலும், இதன் மூலம் ஊராட்சி அமைப்புகள், சமூகம் சார்ந்த அமைப்புகளுடன் (Community Based Organisation) ஒருங்கிணைந்து செயல்படுவது உறுதி செய்யப்படுகிறது.

**9. கழிவுகளை சேகரித்தல் மற்றும் எடுத்துச் செல்லுதல்:** தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இத்திட்டம் முறையாக செயல்படுவதற்கு கீழ்கண்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்யவேண்டும்.

- ஒவ்வொரு 300 குடும்பங்களுக்கும் ஒரு மூன்று சக்கர மிதிவண்டி இருக்க வேண்டும். ஏற்கனவே உள்ள மூன்று சக்கர மிதிவண்டிகளை கருத்தில் கொண்டு மேற்படி விகிதாச்சாரத்தில் தற்போதைய தேவையை கணக்கிட வேண்டும்.
- குப்பைகளை சேகரிக்கவும், சுத்தம் செய்யவும் தேவையான முறையான உபகரணங்கள் இருக்க வேண்டும்.
- தெருக்கள் மற்றும் குக்கிராமங்களில் திடக்கழிவு சேகரிப்பதற்கு குறிப்பிட்ட தினங்களையும் நேரத்தையும் குறிப்பிட்டு கால அட்டவணை இருக்க வேண்டும்.
- மேற்கண்டவாறு குறிக்கப்பட்ட தினங்களையும் நேரத்தையும் அந்தந்த தெருக்களிலும் / குக்கிராமங்களிலும் அறிவிக்கப்பட்டு அதனை முறையாக பின்பற்ற வேண்டும்.

## 10. நறுக்கும் இயந்திரம் (Shredding machine) மற்றும் தூய்மைப்படுத்தும் இயந்திரம் (Cleaning)வழங்குதல்:

இத்திட்டத்தின் கீழ், தேவைக்கு ஏற்ப ஒரு நறுக்கும் இயந்திரமும், ஒரு தூய்மைபடுத்தும் இயந்திரமும் வாங்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிதி வழங்கப்படும். இந்த இயந்திரம், திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தப்படும் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மிகப்பெரிய கிராம ஊராட்சிக்கு வழங்கலாம். அந்த கிராம ஊராட்சி இந்த இயந்திரத்தை பயன்படுத்தவும், பராமரிக்கவும் வேண்டும். இந்த இயந்திரத்தை பயன்படுத்தி பிளாஸ்டிக் கழிவின் மதிப்பினை கூட்டுவதன் மூலம் சம்மந்தப்பட்ட ஊராட்சிகள் அதிக வருவாய் பெறலாம். இதர கிராம ஊராட்சிகள் உட்பட எவர் வேண்டுமானாலும் நறுக்கும் இயந்திரம் பெற்றுள்ள இவ்வூராட்சிக்கு பிளாஸ்டிக் கழிவை விற்கலாம்.

## 11. வழக்கமான தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள்:

கிராம ஊராட்சிகளில் ஏற்கனவே பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் ஆகியோருக்கு குறிப்பிட்ட சாலைகள்/தெருக்கள்/ சந்துகளை ஒதுக்கீடு செய்து, அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள், தெருக்கள் மற்றும் சந்துகள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும், தண்ணீர் தேங்காமலும் பார்த்துக் கொள்வது அப்பணியாளர்களின் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

## 12. தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள்

12.1 இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு, மாவட்ட, வட்டார மற்றும் ஊராட்சி அளவிலான அலுவலர்கள், ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பங்கேற்பாளர்கள் ஆகியோருக்கு தகுந்த பயிற்சியும், திட்டம் குறித்த விழிப்புணர்வும் அளிக்கப்படவேண்டும்.

12.2 திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் திட்டம் செயல்படுத்துவதற்கு 15 நாட்களுக்கு முன்னர், தீவிரமான தகவல் கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள் துவங்கப்பட வேண்டும்.

12.3 இத்தகைய முன்னேற்பாடு காலகட்டத்தில், திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை ஊராட்சிகளில் செயல்படுத்த எடுத்த நடைமுறைகள்

அனைவருக்கும் தெரிவிக்கும் வகையில் சிறப்பு கிராம சபை கூட்டப்பட வேண்டும். உள்ளூர் பொதுமக்கள் ஆதரவுடன் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

12.4 இதற்கு தேவையான நிதியை தூய்மை பாரத இயக்கம் [SBM (G)] திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தகவல், கல்வி மற்றும் தொடர்பு நிதியை பயன்படுத்தலாம்.

## 13. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மற்றும் நிதித் தேவை:

13.1 திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி மற்றும் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்ட நிதி ஆகியவற்றிலிருந்து கீழ்கண்ட செலவினங்களை மேற்கொள்ளலாம்.

**i) மூன்று சக்கர மிதிவண்டிகள் வாங்குதல்:** ஒவ்வொரு 300 குடும்பத்திற்கும் ஒரு மூன்று சக்கர மிதிவண்டி வீதம், தலா ரூ. 20,000/– மதிப்பீட்டில் திடக்கழிவு மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து வழங்கப்படும். ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட மூன்று சக்கர மிதிவண்டிகளை கருத்தில் கொண்டு மொத்தத் தேவை கணக்கிடப்பட வேண்டும்.

**ii) நறுக்கும் இயந்திரம் மற்றும் தூய்மைப்படுத்தும் இயந்திரங்களை வாங்குதல்:** திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒரு நறுக்கும் இயந்திரமும், ஒரு தூய்மை படுத்தும் இயந்திரமும் வாங்க தலா ரூ.3.00 இலட்சம் நிதி வழங்கப்படும்.

iii) **சுத்தப்படுத்துவதற்குத் தேவையான செயல்படு உபகரணங்கள்:** தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளுக்கான உபகரணங்கள் வாங்குவதற்கென நிதியாக ரூ. 25000/– மட்டும் ஒரு முறை வழங்கப்படும்.

**iv) மனிதசக்திக்கு தேவையான நிதி:** முதல் நூறு நாட்களுக்கான ஊதியம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திலிருந்து வழங்கப்படும். திட்ட செயல்பாட்டின் முதல் வருடத்தில், நூறு நாட்களுக்கு அதிகமாக பணி புரிவதற்கான ஊதியம் திடக்கழிவு மேலாண்மைத்திட்ட நிதியில் இருந்து அளிக்கப்படும். இத்திட்டத்தில் பணியாற்றும் நபர்களுக்கான ஊதியம் முதல் வருடத்திற்கு மட்டுமே திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் இருந்து வழங்கப்படும். வரக்கூடிய ஆண்டுகளில் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளின் மூலம் ஈட்டப்படும் வருவாயில் இருந்து செலவினம் மேற்கொள்ளலாம். இதற்கு நிதி போதவில்லை எனில், குறைபாட்டினை பொது நிதி/ தூய்மை பாரத இயக்க (SBM - G) திட்ட திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு (O & M) நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**v) பணியாளர்களுக்கான மேல்சட்டை (Jacket), கையுறைகள், தொப்பி ஆகியவை:** திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியிலிருந்து குறைந்தபட்சம் ஒரு மேல்சட்டை, ஒரு தொப்பி, ஒரு ஜோடி கையுறைகள் ஆகியவை ஒவ்வொரு பணியாளருக்கும் வழங்கப்படும்.

**vi) எதிர்பாராத செலவினங்கள்:** ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் எதிர்பாராத செலவுகளுக்கென, திடக்கழிவு மேலாண்மைத்திட்ட நிதியில் இருந்து ரூ. 10000/— ஒரு முறை மட்டும் வழங்கப்படும்.

**vii) திடக்கழிவு கொட்டுவதற்கு தேவையான குழிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் நிதியில் அமைத்தல்:** இப்பணிகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

மேலே குறிப்பிட்டபடி, தேர்ந்தெடுக்கப்பட்ட 2000 கிராம ஊராட்சிகளுக்கும் சராசரியாக ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கு தலா ரூ. 5.50 இலட்சம் வீதம் என்கிற அடிப்படையில் மொத்தம் ரூ. 110 கோடி தேவைப்படலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**2,000 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்த இனம் வாரியாக தேவைப்படும் நிதி விபரம்.**

| வரிசை எண் | விவரங்கள் | தொகை (ரூ. கோடிகளில்) |
|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மைத் திட்ட பணியாளர்களின் ஊதியம் (முதல் வருடத்தில் 200 நாட்கள் செயல்படுத்துவதற்கு) | 80.00 |
| 2. | மூன்று சக்கர மிதிவண்டி (300 குடும்பங்களுக்கு ஒரு மூன்று சக்கர மிதிவண்டி வீதம்) | 17.00 |
| 3. | மேல்சட்டை மற்றும் இதர பொருட்கள் | 5.00 |
| 4. | திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தேவையான உபகரணங்கள் | 5.00 |
| 5. | நறுக்கும் இயந்திரம் மற்றும் தூய்மைப்படுத்தும் இயந்திரங்கள் (மாவட்டத்திற்கு ஒன்று வீதம்) | 5.00 |
| 6. | எதிர்பாராத செலவினங்கள் | 2.00 |
| | **மொத்தம்** | **110.00** |

எனினும், இந்த ஒவ்வொரு இனத்திற்கான நிதி ஒதுக்கீட்டை, ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீட்டிற்குள், தேவையின் அடிப்படையில் உரிய மாற்றங்கள் செய்வதற்கு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

13.2 ஆரசாணை (நிலை) எண் 116, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி—1) துறை, நாள் 4.9.2013 ன்படி திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் தற்போதைய திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி மனித சக்தி தேவைகளுக்கான தொகை மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படும். மேற்கண்ட கிராம

ஊராட்சிகளில் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளில், திட்ட செயலாக்கம் மற்றும் பராமரிப்புக்கென (O&M) தனியாக நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை என்பதால், இவ்வூராட்சிகளில் பத்தி **13.1** ல் குறிப்பிட்டவாறு மகாத்மா காந்தி ஊரக தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களை ஈடுபடுத்த அனுமதிக்கப்படுகிறது.

பெரிய ஊராட்சிகளில் **திடக்கழிவை கையாள்வதற்கு**, தேவைப்படும் **சாண எரிவாயு கலன் அமைத்தல், மீத்தேன் வாயு கலன்கள்** அமைத்தல் அதன் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம், உரம் ஆகியவற்றை உபயோகித்தல் போன்ற நடவடிக்கைகளை தற்போது நடைமுறையில் உள்ள பிற திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி எடுத்துக் கொள்ளலாம்.

**14.** **நிதி ஒதுக்கீடு:** அரசு, ஊரக பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துவதற்கு **2014-15** ஆண்டிற்கு ரூ **200/-** கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட நிதியில் ஏற்கனவே அரசு, **12,524** கிராம ஊராட்சிகளுக்கு **17,638** மூன்று சக்கர மிதிவண்டிகள் வாங்குவதற்கென ரூ.**44.10** கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மீதமுள்ள ரூ **155.90** கோடியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட **2000** கிராம ஊராட்சிகளில் செயல்படுத்த உத்தேசமாக ரூ **110/–** கோடி தேவைப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதியை, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் விடுவிப்பார்.

**15.** **செயல்படுத்தும் முகமை:** உரக்குழி மற்றும் குப்பை சேகரிக்கும் குழிகள் (மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ்) அமைத்தல், மூன்று சக்கர மிதிவண்டிகள் வாங்குதல், துாய்மைப்படுத்துவதற்கான உபகரணங்கள் வாங்குதல், பணியாளர்களுக்கு மேல்சட்டை வழங்குதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தி மேற்பார்வையிடுதலுக்கு கிராம ஊராட்சி செயல்படுத்தும் முகமையாக இருக்கும். செயல்படுத்தும் முகமையானது மேற்கண்ட உபகரணங்களை கொள்முதல் செய்யும்போது நடைமுறையில் உள்ள நிதி செலவின விதிமுறைகளை (Financial Code) முறையாக பின்பற்றிட வேண்டும்.

**16.** **கணக்குகளை பராமரித்தல்:**

**16.1** திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கென பெறப்படும் நிதியினை கண்காணிக்கவும் திட்டம் நீடித்து செயல்படுவதை உறுதி செய்யவும் கிராம ஊராட்சி இதற்கென தனி சேமிப்பு வங்கி கணக்கினை பராமரிக்க வேண்டும். இக்கணக்கை பராமரிக்கும் முறை, கிராம ஊராட்சி திட்ட நிதி கணக்கு எண்: **3**–ஐ பராமரிக்கும் முறையிலேயே அமைய வேண்டும். அந்தந்த கிராம ஊராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக புதியதாக ஆரம்பிக்கப்பட்ட வங்கி கணக்கிற்கே, மாவட்ட ஆட்சியர் நிதியை விடுவிக்க வேண்டும்.

16.2 அரசு ஆணை எண்.**116** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி–**1**) துறை நாள் **4.9.1203**ன் படி திட்ட வடிவில் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த கிராம ஊராட்சிகளில் இந்த திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி மனிதசக்தி தேவைக்கான நிதி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படும்.

**17 கிராம ஊராட்சி அளவிலான திடக்கழிவு மேலாண்மைக் குழு:**

தினசரி செயல்பாடுகளை கண்காணிக்க, சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சி அளவில் திடக்கழிவு மேலாண்மைக் குழு ஒன்று கீழ்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்

1. கிராம ஊராட்சித் தலைவர்.
2. கிராம ஊராட்சித் துணைத்தலைவர்.
3. சம்மந்தப்பட்ட வார்டு உறுப்பினர்.
4. சம்மந்தப்பட்ட குக்கிராமத்தைச் சார்ந்த, ஊராட்சிமன்ற வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பிரதிநிதி.
5. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் பணித்தளப் பொறுப்பாளர்.

வார்டு உறுப்பினர் மற்றும் குக்கிராமம் பிரதிநிதித்துவம் உடைய / கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் தங்களின் பகுதிகளில் செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பார்கள்.

**18 சமூக தணிக்கை:**

சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியைப் பொருத்தமட்டில் திடக்கழிவு மேலாண்மைத்திட்ட செயல்பாடுகளுக்கான சமூக தணிக்கையை கிராம சபை மேற்கொள்ளும். இத்திட்டத்தின் வெளிப்படை தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து வரவு செலவுகள் ஆலோசனைக்காகவும் மற்றும் மேம்பாட்டிற்காகவும் எல்லா கிராம சபா கூட்டங்களிலும், வைக்கப்பட வேண்டும்.

**19. கண்காணித்தல்:**

திடக்கழிவு மேலாண்மைத்திட்ட செயலாக்கம் குறித்து அவ்வப்போது மாநில அளவில் / மாவட்ட அளவிலான உயர் அலுவலர்களின் ஆய்வின்போதும், வட்டார அளவிலான அலுவலர்கள் மேற்கொள்ளும் ஆய்வின் போதும் கண்காணிக்கப்பட வேண்டும். திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாடு குறித்து கிராம ஊராட்சிகளில் அமைக்கப்பட்ட **திடக்கழிவு மேலாண்மை குழு** மூலமாகவும் கிராம சபா மூலமாகவும் முறையாக கண்காணிக்கப்படவேண்டும்.

அரசு செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்கள் அவ்வப்போது ஏற்படும் தேவைகளுக்கு ஏற்ப ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களுடன் ஆலோசித்து, திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் மாற்றங்கள் மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்படுகிறது.

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## இணைப்பு – II

| திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளின் மாவட்ட வாரியான எண்ணிக்கை விவரம் | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் எண்ணிக்கை | திட்டம் செயல்படுத்தப்பட உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை |
| 1 | காஞ்சிபுரம் | 13 | 633 | 198 |
| 2 | திருவள்ளூர் | 14 | 526 | 130 |
| 3 | கடலூர் | 13 | 683 | 64 |
| 4 | விழுப்புரம் | 22 | 1099 | 120 |
| 5 | வேலூர் | 20 | 743 | 140 |
| 6 | திருவண்ணாமலை | 18 | 860 | 86 |
| 7 | சேலம் | 20 | 385 | 58 |
| 8 | நாமக்கல் | 15 | 322 | 74 |
| 9 | தர்மபுரி | 8 | 251 | 44 |
| 10 | கிருஷ்ணகிரி | 10 | 333 | 30 |
| 11 | ஈரோடு | 14 | 225 | 68 |
| 12 | திருப்பூர் | 13 | 265 | 90 |
| 13 | கோயம்புத்தூர் | 12 | 228 | 100 |
| 14 | நீலகிரி | 4 | 35 | 11 |
| 15 | தஞ்சாவூர் | 14 | 589 | 80 |
| 16 | நாகப்பட்டினம் | 11 | 434 | 56 |
| 17 | திருவாரூர் | 10 | 430 | 40 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14 | 404 | 88 |
| 19 | கரூர் | 8 | 157 | 22 |
| 20 | அரியலூர் | 6 | 201 | 25 |
| 21 | பெரம்பலூர் | 4 | 121 | 20 |
| 22 | புதுக்கோட்டை | 13 | 497 | 74 |
| 23 | மதுரை | 13 | 420 | 56 |
| 24 | தேனி | 8 | 130 | 20 |
| 25 | திண்டுக்கல் | 14 | 306 | 60 |
| 26 | இராமநாதபுரம் | 11 | 429 | 44 |
| 27 | விருதுநகர் | 11 | 450 | 60 |
| 28 | சிவகங்கை | 12 | 445 | 38 |
| 29 | திருநெல்வேலி | 19 | 425 | 42 |
| 30 | தூத்துக்குடி | 12 | 403 | 50 |
| 31 | கன்னியாகுமரி | 9 | 95 | 12 |
| | மொத்தம் | **385** | **12524** | **2000** |

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்